04-11-2012 Dinakaran

### முதல் பாதையில் 125 மீட்டருக்கு பணி நிறைவு

# நேரு பூங்காவில் 2வது பாதையிலும் சுரங்கம் தோண்டும் பணி துவக்கம்

**சென்னை, நவ. 4:** மெட்ரோ ரயில் பாதைக்காக நேரு பூங்காவில் முதல் சுரங்கத்தில் 125 மீட்டர் நீளத்துக்கு தோண்டப்பட்ட நிலையில், நேரு பூங்காவில் பூமிக்கு அடியில் 2வது பாதை அமைப்பதற்கான சுரங்கம் தோண்டும் பணி நேற்று துவங்கியது.

வண்ணாரப்பேட்டையில் இருந்து விமான நிலையம் வரை 23 கி.மீ. தூரமும், சென்ட்ரலில் இருந்து புனித தோமையர் மலை வரை 22 கி.மீ. தூரமும் மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. மொத்தமுள்ள 45 கி.மீ. தூரத்தில் 24 கி.மீ. தூரம் ரயில் பாதை பூமிக்கு அடியில் அமைக்கப்பட உள்ளது.

சுரங்கம் தோண்டுவதற்கான 11 டனல் போரிங் இயந்திரம் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. முதலாவதாக கீழ்ப்பாக்கம் அருகே உள்ள நேரு பூங்காவில் டனல் போரிங் மிஷின் இறக்கப்பட்டு, கடந்த ஜூலை 28ம் தேதி முதல் சுரங்கம் தோண்டும் பணி நடைபெற்று வருகிறது. நேற்று வரை அங்கு 125 மீட்டர் நீளத்துக்கு பூமிக்கு அடியில் சுரங்கம் தோண்டப்பட்டுள்ளது.



**மெட்ரோ ரயில் பணிகள் தீவிரம்**

இதையடுத்து 2வதாக கடந்த மாதம் 25ம் தேதி வண்ணாரப்பேட்டையில் இருந்து சென்ட்ரல் ரயில் நிலையம் வரை டனல் போரிங் மிஷின் மூலம் சுரங்கம் தோண்டும் பணி துவங்கியது. வண்ணாரப்பேட்டையில் துவங்கிய இந்த பணி மண்ணடி, உயர்நீதிமன்றம் ஆகிய ரயில் நிலையங்களை தாண்டி சென்ட்ரல் ரயில் நிலையம் வரை சுமார் 1350 மீட்டர் நீளத்துக்கு சுரங்கம் தோண்டப்பட உள்ளது. வண்ணாரப்பேட்டையில் சுரங்கம் தோண்டும் பணி துவங்கி 10 நாளில் 28 மீட்டர் நீளத்துக்கு சுரங்கம் தோண்டப்பட்டு, 1.4 மீட்டர் நீளம், 6 மீட்டர் அகலம் உள்ள 20 கான்கிரீட் வளையம் பொருத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேரு பூங்காவில் 2வது மெட்ரோ ரயில் சுரங்கப்பாதை அமைக்க பூமிக்கு அடியில் டனல் போரிங் மிஷின் மூலம் சுரங்கம் தோண்டும் பணி நேற்று மாலை துவங்கப்பட்டது.

இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவன உயர் அதிகாரி கூறும்போது, "நேரு பூங்காவில் ஜூலை 28ம் தேதி முதல் பாதையில் சுரங்கம் தோண்டும் பணி நடைபெற்றது. நேரு பூங்காவில் இருந்து எழும்பூர் வரை 939 மீட்டர் நீளத்துக்கு சுரங்கம் தோண்டி முடிக்கப்படும். முதல் டனல் போரிங் மிஷின் 125 மீட்டரை தாண்டி சென்றதையொட்டி, 2வது சுரங்கப்பாதையில் நேற்று 2வது டனல் போரிங் மிஷின் மூலம் சுரங்கம் தோண்டும் பணி துவங்கியுள்ளது. எழும்பூர் வரை சுரங்கம் தோண்டி முடிக்கப்பட்டதும், பின்னர் இதே எந்திரம் மூலம் மீண்டும் நேரு பூங்காவில் இருந்து கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி வழியாக ஷெனாய்நகர் வரை சுரங்கப்பாதை அமைக்கப்படும்" என்றார்.

## கோயம்பேடு–வடபழனி தண்டவாளம் முடிந்தது

திருமங்கலத்தில் இருந்து புனித தோமையர் மலை வரை உயர்த்தப்பட்ட (மேம்பாலம்) பாதையில் மெட்ரோ ரயில் பாதை அமைப்பதற்காக சுமார் 80 சதவீத இடங்களில் ராட்சத தூண் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. அடுத்தகட்டமாக கோயம்பேட்டில் இருந்து வடபழனி வரை இரண்டு வழித்தடத்திலும் 2,934 மீட்டர் நீளத்துக்கு தண்டவாளம் அமைக்கும் பணி தற்போது முடிவடைந்துள்ளது. அடுத்து வடபழனி - அசோக் நகர் இடையே தண்டவாளம் அமைக்கும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது. 2013ம் ஆண்டு இறுதிக்குள் உயர்த்தப்பட்ட பாதையில் மெட்ரோ பணிகள் அனைத்தும் முடிந்து போக்குவரத்துக்கு தயாராகி விடும் என்று மெட்ரோ அதிகாரி கூறினார்.

## மரம் நடும் பணியும் தீவிரம்

சென்னையில் 45 கி.மீ. மெட்ரோ ரயில் பாதை அமைப்பதற்காக பல இடங்களில் கட்டிடங்கள் மற்றும் மரங்கள் அகற்றப்பட்டது. குறிப்பாக பச்சையப்பன் கல்லூரி பகுதியில் மரங்களை அகற்றும் போது பசுமை ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். வெட்டப்பட்ட மரங்களுக்கு ஈடாக கூடுதல் மரக்கன்றுகள் நடப்படும் என்று மெட்ரோ ரயில் நிறுவனம் உறுதி அளித்தது. அதன்படி 2011-12ம் ஆண்டுகளில் 15,827 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. 2012-13ம் ஆண்டு 16,000 மரக்கன்று நட முடிவு செய்யப்பட்டு, இதுவரை 2,100 மரக்கன்றுகள் வனத்துறை மூலமும், 3,499 மரங்கள் ஒப்பந்த நிறுவனங்கள் மூலமும் சென்னையில் ஆங்காங்கே நடப்பட்டுள்ளது. மரக்கன்றுகள் நடுவது மட்டுமின்றி, ஒரு வருடம் அந்த மரக்கன்றுகளை பராமரிக்கும் பணியிலும் மெட்ரோ ரயில் நிர்வாகம் ஈடுபடுகிறது.